**ஜனவரி – 26**

**TNPSC துளிகள்**

- கீழடியில் ஒரு புதிய திறந்தவெளி அருங்காட்சியகம் மற்றும் கங்கை கொண்ட சோழ புரத்தில் அருங்காட்சியகம் ஆகியவற்றிற்கு தமிழக முதல்வர் அடிக்கல் நாட்டினார்.
- அரிட்டாபட்டி பல்லுயிர்ப் பெருக்கத் தளத்திற்கு மிகவும் அருகில் உள்ள தமிழ்நாட்டின் நாயக்கர்பட்டி டங்ஸ்டன் கனிமத் தொகுதியின் ஏலத்தினை ரத்து செய்வதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- நாங்குநேரி, திசையன்விளை மற்றும் சாத்தான் குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மழை மறைவுப் பகுதிகளில் 15,000 ஏக்கர் பரப்பிலான நிலங்களுக்கு மிகவும் பயனளிக்கும் வகையிலான தாமிரபரணி – கருமேனியாறு- நம்பியாறு நதிநீர் இணைப்புத் திட்ட துவக்கத்தினைத் தமிழக முதல்வர் தொடங்கி வைக்க உள்ளார்.
- 2025 ஆம் ஆண்டு குடியரசு தினக் கொண்டாட்டத்திற்கான கருத்துரு, 'சுவர்ணிம் பாரத் - விராசத் ஔர் விகாஸ்' (பொன் மயமான இந்தியா- பாரம்பரியம் மற்றும் மேம்பாடு) என்பதாகும்.
- இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாண்டோ 2025 ஆம் ஆண்டு குடியரசு தின விழாவிற்கான தலைமை விருந்தினராக கலந்து கொண்டுள்ளார் என்ற நிலையில் இது இந்தியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான அரசு முறை உறவுகளின் 75வது ஆண்டு நிறைவில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.
- இந்திய உயர் ஆணையம் ஆனது, இலங்கையில் உள்ள யாழ்ப்பாணக் கலாச்சார மையத்தினை "சிறந்தத் தமிழ் கவிஞரும் தத்துவஞானியுமான திருவள்ளுவரை நன்கு கௌரவிக்கும் விதமாக" 'திருவள்ளுவர் கலாச்சார மையம்' என்று மறுபெயரிடுவதாக அறிவித்துள்ளது.
- மேற்கு வங்காளத்தின் புருலியா மாவட்டத்தில் உள்ள கர்பஞ்சகோட் மலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கிழக்கு இந்தியாவின் முதல் வானியல் ஆய்வகம் ஆனது திறக்கப் பட்டுள்ளது.
- உஷா வான்ஸ், அவரது கணவர் J.D.வான்ஸ் அமெரிக்காவின் 50வது துணை அதிபராகப் பதவியேற்றதையடுத்து, முதலாவது இந்திய-அமெரிக்க மற்றும் இந்து மதத்தினைச் சேர்ந்த இரண்டாவது குடிமகள் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- தேசியப் புயல் தயார்நிலை திட்டத்தின் கீழான இந்தியாவின் முதலாவது முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட பேரிடர் முன் எச்சரிக்கை வழங்கீட்டு அமைப்பான 'KaWaCHaM' என்ற நெருக்கடி மற்றும் இடர் மேலாண்மை அமைப்பினை கேரள அரசு அறிமுகப் படுத்தி யுள்ளது.
- மத்திய அரசானது, தற்போது சுமார் 605 ஆக உள்ள புவிசார் குறியீடுகளை 2030 ஆம் ஆண்டிற்குள் 10,000 புவிசார் குறியீடுகளைப் (GI) பெறுவதை இலக்காக நிர்ணயித்து உள்ளது.
- ஜேனட் பெட்ரோ நாசா நிறுவனத்தின் தற்காலிக நிர்வாகியாக நியமிக்கப் பட்டுள்ளார் என்பதையடுத்து, இந்த நிறுவனத்திற்குத் தலைமை வகிக்கும் முதல் பெண்மணி என்ற பெருமையினை அவர் பெற்றுள்ளார்.


# தமிழ்நாடு செய்திகள்

## iTNT - அறக்கட்டளை நிதி


- iTNT மையமானது அதன் அறக்கட்டளை சார் நிதியை (மேம்பட்ட தொழில்நுட்ப

முன்னேற்றங்கள் மற்றும் மிகவும் மாறுதல் மிக்க புத்தாக்கங்களை வெளிக் கொணரச் செய்வதற்கான நிதியியல் வாய்ப்புகள்) அறிமுகப்படுத்தியுள்ளது.

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது, இந்தியா அரசின் ஆதரவுடன், முதல் தவணையாக 2 கோடி ரூபாய் ஆனது தமிழகத்தில் உள்ள மேம்பட்ட மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட உள்ளது.
- இத்தகையப் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஒரு துணிகர முதலீட்டிற்கு என சுமார் 40 லட்சம் ரூபாய் வரையில் iTNT நிதியுதவி வழங்கும்.




## தமிழ்நாட்டில் இரும்புக் காலம்





- தமிழ்நாடு மாநில அரசானது 'இரும்பின் தொன்மை: தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கப் பெற்ற சமீபத்திய கதிரியக்கக் கால மதிப்பீட்டுத் தேதிகள்' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சிவகளையில் கிடைக்கப் பெற்ற முதுமக்கள் தாழி மாதிரிகளின் கதிரியக்கக் கால மதிப்பீடு மூலம் இந்தப் புதியக் கண்டுபிடிப்பு ஆனது

மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இன்றையத் தமிழ்நாட்டில் இரும்பு காலம் என்பது சுமார் கி.மு. 3,345 ஆம் ஆண்டிலேயே தொடங்கியிருக்கலாம் என்று இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.
- இப்புதியக் கண்டுபிடிப்புகளானது தமிழக நிலப்பரப்பில் இரும்பு அறிமுகமான காலம் ஆனது 5,300 ஆண்டுகளுக்குப் பிந்தையது என்று கூறுகிறது.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது, வடக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவில் சிந்து சமவெளி நாகரிகம் இருந்த அதே காலக் கட்டத்தில் தென்னிந்தியாவில் இரும்புக் கால நாகரிகம் இருந்ததாகக் கூறுகிறது.
- இந்தக் கண்டுபிடிப்புகளுக்கு முன்பு, தமிழ்நாட்டின் முற்கால இரும்புப் பொருட்கள் சுமார் கி.மு. 2172 ஆம் ஆண்டு காலத்தைச் சேர்ந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மயிலாடும்பாறையில் இருந்து கண்டெடுக்கப்பட்டன.
- கூடுதலாக, மற்றொரு அகழாய்வுத் தளமான தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்ச நல்லூர் பகுதியில், கி.மு. 2517 ஆம் காலத்தைச் சேர்ந்த இரும்புப் பொருட்களுடன் தொடர்புடைய ஒரு நிலக்கரி மாதிரி கண்டெடுக்கப்பட்டது.
- இதனுடன் ஒப்பிடுகையில், கர்நாடகாவில் உள்ள பிரம்மகிரி மற்றும் ஐதராபாத்திற்கு அருகிலுள்ள காச்சிபௌலி போன்ற இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து கிடைக்கப் பட்ட இரும்புப் பொருட்கள் முறையே கி.மு. 2140 மற்றும் கி.மு. 2200 ஆம் காலக் கட்டத்தினைச் சேர்ந்தவையாகக் கூறப்படுகின்றன.
- இதற்கு முன் சுமார் கி.மு. 1,380 ஆம் ஆண்டுக்கு முந்தைய காலக்கட்டத்தினைச் சேர்ந்த சான்றுகள் கிடைக்கப் பெற்றதால் ஹிட்டைட் பேரரசு என்பது (நவீன கால துருக்கியில்) இரும்பைப் பயன்படுத்திய முதல் நாகரிகம் என்று நம்பப்பட்டது.

## மேற்கூரை சூரிய மின்னாற்றல் உற்பத்தி அமைப்புகளின் பங்கு – தமிழ்நாடு




- மேற்கூரை சூரிய மின்னாற்றல் உற்பத்தி மைப்புகளில் இருந்து உற்பத்தி செய்யப் படும் மின்சாரத்தின் பங்கு என்பது தமிழ்நாட்டின் மொத்த மின்சார ஆற்றலில் வெறும் 1% மட்டுமேயாகும்.

- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி நிலவரப்படி தமிழ்நாட்டின் மொத்த நிறுவப் பட்ட மின்னாற்றல் திறன் 41,741.45 மெகாவாட்டாக இருந்தது.
- இதில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 24,323.42 மெகாவாட் ஆகும்.
- குஜராத்தின் மொத்த மின்சார ஆற்றல் உற்பத்தியில் மேற்கூரை சூரிய மின்னாற்றல் உற்பத்தி 5%, மகாராஷ்டிராவில் 2%, கர்நாடகாவில் 1% மற்றும் கேரளாவில் 5% ஆக உள்ளது.

# தேசியச் செய்திகள்

## நிதி ஆயோக் அமைப்பின் நிதி வளக் குறியீடு 2025


| States | FHI Score | Rank 2022-23 | Quality of Expenditure | Revenue Mobilization | Fiscal Prudence | Debt Index | Debt Sustainability |
|---|---|---|---|---|---|---|---|
| Odisha | 67.8 | 1 | 52.0 | 69.9 | 54.0 | 99.0 | 64.0 |
| Chhattisgarh | 55.2 | 2 | 55.1 | 56.5 | 56.0 | 79.6 | 29.0 |
| Goa | 53.6 | 3 | 45.5 | 87.1 | 59.4 | 51.0 | 25.2 |
| Jharkhand | 51.6 | 4 | 47.3 | 45.7 | 62.4 | 66.9 | 35.7 |
| Gujarat | 50.5 | 5 | 40.0 | 48.7 | 52.7 | 69.0 | 42.0 |
| Maharashtra | 50.3 | 6 | 37.1 | 59.1 | 41.8 | 76.4 | 36.8 |
| Uttar Pradesh | 45.9 | 7 | 45.8 | 34.6 | 44.7 | 59.9 | 44.5 |
| Telangana | 43.6 | 8 | 36.9 | 75.2 | 40.8 | 53.3 | 11.7 |
| Madhya Pradesh | 42.2 | 9 | 59.7 | 27.6 | 35.6 | 61.0 | 27.2 |
| Karnataka | 40.8 | 10 | 47.4 | 43.9 | 43.9 | 62.2 | 6.7 |
| Tamil Nadu | 29.2 | 11 | 32.0 | 41.2 | 25.8 | 36.0 | 11.1 |
| Rajasthan | 28.6 | 12 | 38.3 | 35.4 | 19.9 | 32.3 | 16.8 |
| Bihar | 27.8 | 13 | 56.1 | 5.3 | 11.5 | 47.2 | 18.8 |
| Haryana | 27.4 | 14 | 24.8 | 47.8 | 26.1 | 24.1 | 14.3 |
| Kerala | 25.4 | 15 | 4.2 | 54.2 | 34.0 | 23.1 | 11.3 |
| West Bengal | 21.8 | 16 | 32.3 | 12.4 | 25.4 | 18.3 | 20.6 |
| Andhra Pradesh | 20.9 | 17 | 31.4 | 22.1 | 13.3 | 37.8 | 0.0 |
| Punjab | 10.7 | 18 | 4.7 | 28.1 | 5.6 | 0.0 | 15.2 |

- நிதி ஆயோக் அமைப்பின் முதல் நிதி வளக் குறியீடு (FHI) அறிக்கையில் பட்டியலிடப் பட்டுள்ள மாநிலங்களில் ஒடிசா, சத்தீஸ்கர், கோவா மற்றும் ஜார்க்கண்ட் ஆகியவை சிறந்த செயல்திறன் கொண்ட 'சாதனை மாநிலங்களாக' உருவெடுத்துள்ளன.
- 18 முக்கிய மாநிலங்களின் மதிப்பீட்டினை உள்ளடக்கிய 'நிதி வளக் குறியீடு 2025' என்ற தலைப்பிலான இந்த அறிக்கையானது, 2022-23 ஆம் ஆண்டின் நிலைமை மீதான அடிப்படையில் மாநிலங்களைத் தரவரிசைப் படுத்தியுள்ளது.
- பஞ்சாப், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் கேரளா ஆகியவை இந்தக் குறியீட்டில் மோசமான செயல் திறன் கொண்ட மாநிலங்களாக தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளன.
- ஒவ்வொன்றும் குறிப்பிடத்தக்க பல்வேறு நிதிச் சவால்களை எதிர்கொண்டுள்ளதால், 'முன்னேற்றத்தினை நாடுபவை' பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.
- மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், தெலுங்கானா, மத்தியப் பிரதேசம், கர்நாடகா ஆகியவை 'முன்னணியில் உள்ளவை' பிரிவின் கீழ் பட்டியலிடப் பட்டுள்ளன.

- தமிழ்நாடு, பீகார், இராஜஸ்தான் மற்றும் ஹரியானா ஆகியவை சிறந்த செயல்திறன் கொண்டவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சாதனை 2024

- 2024 ஆம் ஆண்டில் 24.5 ஜிகாவாட் (GW) அளவிலான சூரிய மின்னாற்றல் திறனும் 3.4 GW காற்றாற்றல் திறனும் உற்பத்தி செய்யப் பட்டதுடன் இந்தியா ஒரு சாதனை மைல் கல்லை எட்டியுள்ளது.
- இந்தியாவின் மொத்த புதைபடிவம் சாரா எரிபொருள் சார்ந்த ஆற்றல் உற்பத்தி திறன் ஆனது 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி 217.62 GW ஆக உள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 500 GW அளவிலான புதைபடிவம் சாரா எரிபொருள் சார்ந்த ஆற்றல் உற்பத்தி திறன் என்ற ஒரு இலக்கை அடையும் பாதையில் இந்தியா முன்னேறி வருகிறது.
- 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில், இந்தியாவில் சூரிய மின் ஆற்றல் உற்பத்தி அமைப்புகளின் நிறுவல்கள் இரு மடங்குக்கும் மேலாக அதிகரித்து உள்ளது என்பதோடு காற்றாலை உற்பத்தி அமைப்புகளின் நிறுவல்கள் சுமார் 21% அதிகரித்துள்ளன.
- இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி திறனில் சூரிய மின்னாற்றல் தற்போது 47% பங்கினைக் கொண்டுள்ளது.
- மேற்கூரை சூரிய மின்னாற்றல் உற்பத்தி துறை ஆனது 53% வளர்ச்சியடைந்து, 4.59 GW அளவிலான திறனைப் புதிதாக நிறுவியுள்ளது.
- குஜராத், கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவை மிகப் புதியதாக நிறுவப்பட்ட 3.4 GW காற்றாலை ஆற்றலில் 98% பங்கினை அளிக்கின்றன.





## தேசிய சுகாதாரத் திட்டம் நீட்டிப்பு

- கடந்த மூன்று ஆண்டுகளில் அதன் முன்னேற்றத்தினை மறுமதிப்பாய்வு செய்தபிறகு, தேசிய சுகாதாரத் திட்டத்தினை (NHM) மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய

அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்தத் திட்டமானது, முதன்முதலில் 2005 ஆம் ஆண்டில் தேசிய கிராமப்புற சுகாதாரத் திட்டமாக (NRHM) தொடங்கப்பட்டது.
- சமீபத்தில் 2021 ஆம் ஆண்டில் 2026 ஆம் ஆண்டு வரையில் நீட்டிக்கப் பட்டதுடன், இந்தத் திட்டம் ஆனது பல முறை நீட்டிக்கப் பட்டுள்ளது.




## யூரோட்ரோன் திட்டத்தில் இந்தியா




- இந்திய நாடானது, நடுத்தர உயர வரம்புடைய நீண்ட தாங்குதிறன் கொண்ட தொலை தூரத்தில் இருந்து இயக்கக் கூடிய விமான அமைப்பு (MALE RPAS) அல்லது யூரோட்ரோன் திட்டத்தில் ஒரு பார்வையாளர் நாடாக அதிகாரப் பூர்வமாக இணைந்துள்ளது.
- யூரோட்ரோன் என்பது ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி மற்றும் ஸ்பெயின் ஆகியவற்றை உள்ளடக்கிய நான்கு நாடுகளின் முன்னெடுப்பாகும்.
- ஜப்பான் நாடானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் முதல் அதிகாரப்பூர்வ OCCAR பார்வையாளர் நாடாக மாறியது.
- யூரோட்ரோன் என்பது தொலைதூரத்தில் இருந்து இயக்கக் கூடிய ஆளில்லா விமான அமைப்பு (RPAS) ஆகும்.
- இது தகவல் சேகரிப்பு, கண்காணிப்பு, இலக்கினை குறிவைத்தல் மற்றும் உளவுப் பணி (ISTAR), கடல்சார் கண்காணிப்பு, நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போர்த் திறன் மற்றும் வான்வழி முன் எச்சரிக்கை போன்ற நீண்ட நேரச் செயல்பாடுகள் தேவைப்படும் பல பணிகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- அதிகபட்சமாக 2.3 டன் செயல்பாட்டுச் சாதனங்கள் சுமக்கும் திறன் கொண்ட இது 40 மணி நேரம் வரை செயல்படும் திறன் கொண்டது.
- முன்னதாக, இந்தியாவானது ரஷ்யாவின் Su-57 போர் விமானத் திட்டத்தில் இணைந்தது ஆனால் 2018 ஆம் ஆண்டில் அத்திட்டத்தில் இருந்து விலகியது.

# சர்வதேசச் செய்திகள்

## ஸ்டார்கேட் திட்டம்




- OpenAI, ஆரக்கிள், சாப்ட்பேங்க் மற்றும் MGX ஆகிய நிறுவனங்கள் 'ஸ்டார்கேட்' எனப் படும் உலகின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவுத் திட்டத்தினை நிறுவுவதற்காக ஒன்றிணைந்துள்ளன.
- ஸ்டார்கேட் என்பது அடுத்த நான்கு ஆண்டுகளில் அமெரிக்க நாட்டில் செயற்கை நுண்ணறிவு உள்கட்டமைப்பினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட சுமார் 500 பில்லியன் டாலர் மதிப்பிலான முன்னெடுப்பாகும்.
- இது செயற்கை நுண்ணறிவு நுட்பத்தின் பெரும் முன்னேற்றங்களில் ஒரு உலகளாவிய தலைமைத்துவத்தினை நோக்கி அமெரிக்காவை உந்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## விண்வெளி வீரர்கள் பயணப் பெட்டகத்தின் திரவ உந்துவிசை அமைப்பு

- திரவ உந்துவிசை அமைப்பின் ஒருங்கிணைப்பை மிக வெற்றிகரமாக நிறைவு செய்த பிறகு, ககன்யான் (G1) திட்டத்தின் முதன்முதலாவது விண்வெளி வீரர்கள் இல்லாத பயணத்திற்கான பெட்டகத்தினை இஸ்ரோ பெற்றுள்ளது.
- விண்வெளி வீரர்கள் குழுவினரை விண்வெளிக்கு அனுப்புவதற்கு முன்னதாக, இஸ்ரோ அதன் ககன்யான் திட்டத்தின் கீழ் விண்வெளி வீரர்கள் இல்லாத இப்பெட்டகத்தினை விண்வெளிக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.
- ககன்யான்-G1 கலமானது இந்த ஆண்டின் தொடக்கத்தில் விண்ணில் ஏவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- அடுத்தடுத்து ஏவப்பட உள்ள ககன்யான்-G2 மற்றும் G3 எனப்படும் விண்வெளி வீரர்கள் இல்லாத இரண்டு பெட்டகங்களுக்கு அடுத்தப் பயணம் இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயணத்திற்கு வழி வகுக்கும்.



# மாநிலச் செய்திகள்

## சினார் மரத்திற்குப் புவிசார் குறியிடல்





- ஜம்மு-காஷ்மீர் அரசாங்கம் ஆனது, காஷ்மீரில் உள்ள பாரம்பரிய சினார் மரங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் புவிசார் குறியிடல் செயல்முறையைத் தொடங்கியுள்ளது.
- சினார் மரங்கள் ஆனது அதிக ஆக்ஸிஜன் உற்பத்தி செய்யும் மரங்களாகும்.
- அந்த மாநில அரசானது இந்த மரங்களுக்கு 'எண்ணிம ஆதார்களை' வழங்கி ஊடறி செய்யக் கூடிய விரைவுக் குறியீடுகளை (QR) நிறுவியுள்ளது.
- தற்போது, ஒவ்வொரு சினார் மரத்திற்கும் அதன் சொந்த 'ஆதார்' எண் உள்ளதுடன் அது டிஜிட்டல் இந்தியா கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சினார் மரங்களின் எண்ணிக்கையுடன் கூடிய அதன்

சொந்த மாவட்டக் குறியீடு உள்ளது.

- இதுவரையில், அந்த மாநில அரசானது 28,560 சினார் மரங்களை அடையாளம் கண்டு புவிசார் குறியீடுகளை வழங்கியுள்ளன.

# முக்கிய தினங்கள்

## பராக்கிரம் திவாஸ் - ஜனவரி 23




- சுபாஷ் சந்திர போஸ் ஜெயந்தி ஆனது, பராக்கிரம் திவாஸ் அல்லது வீரர் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- சுபாஷ் சந்திர போஸ் அவர்கள், 1897 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் தேதியன்று ஒரிசா மாநிலத்தின் கட்டாக் எனுமிடத்தில் பிறந்தார்.
- இந்தியச் சுதந்திரத்தினை மீட்டெடுப்பதில் போஸ் அவர்கள் மேற்கொண்ட பல்பெரும் முயற்சிகளுக்குக் கௌரவமளிக்கும் வகையில், 2021 ஆம் ஆண்டில் அரசாங்கம் இந்த நாளை அறிவித்தது.
- 1920 ஆம் ஆண்டில் இந்திய ஆட்சிப் பணி (ICS) தேர்வில் தேர்ச்சி பெற்று, நான்காவது இடத்தை அவர் பிடித்தார்.
- போஸ் 1938 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸின் இளம் வயது தலைவரானார்.
- பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியை எதிர்த்துப் போராடுவதற்காக 1943 ஆம் ஆண்டில் நேதாஜி இந்திய தேசிய இராணுவத்தை (INA) நிறுவினார்.
- "ஜெய் ஹிந்த்" என்ற சொற்றொடர் ஆனது தேசிய ஒற்றுமை மற்றும் சுதந்திரத்திற்கான ஒரு முழக்கமாக போஸ் அவர்களால் பிரபலப்படுத்தப்பட்டது.
- 1943 ஆம் ஆண்டு அக்டோபர் 21 ஆம் தேதியன்று, சிங்கப்பூரில் சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கம் (ஆசாத் ஹிந்த் அரசு) நிறுவப்படுவதாக போஸ் அறிவித்தார்.
- வன்முறையற்ற வழி முறைகள் மூலம் காலனித்துவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளுக்காக போஸ் அவர்கள் 1937 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசினைப் பெறுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டார்.

## தேசியப் பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி 24


- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது, பாலினச் சமத்துவத்தினை ஊக்குவிப்பதற்காகவும் இந்தியாவில் பெண் குழந்தைகளின் நலன் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் இந்த நாளினை முதன்முதலில் 2008

ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

- 2025 ஆம் ஆண்டு தேசியப் பெண் குழந்தைகள் தினத்திற்கான கருத்துரு, "Empowering Girls for a Bright Future" என்பதாகும்.
- பேடி பச்சாவ், பேடி பதாவோ (பெண் குழந்தையைப் பாதுகாத்தல், பெண் குழந்தைக்கு கல்வி அளித்தல்) என்ற திட்டம் ஆனது 2015 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.




## சர்வதேசக் கல்வி தினம் - ஜனவரி 24




- அமைதி மற்றும் வளர்ச்சியை உறுதி செய்வதில் கல்வியின் முக்கியத்துவத்தை இந்த நாள் குறிக்கிறது.
- முதல் சர்வதேசக் கல்வி தினம் ஆனது 2019 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, 'AI and education: Preserving human agency in a world of automation' என்பதாகும்.
- இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களின்

பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் நவம்பர் 11 ஆம் தேதியன்று இந்தியா தனது தேசியக் கல்வி தினத்தைக் கொண்டாடுகிறது.

# இதரச் செய்திகள்

## இந்தியாவின் முதல் eVTOL வான்வழி வாடகை வாகனம் 'ஷுன்யா'

- பெங்களூருவில் உள்ள சர்லா ஏவியேஷன் நிறுவனமானது, ஷுன்யா எனப்படும் அதன் புதுமையான வான்வழி வாடகை மின்சார வாகனத்தினை அறிமுகப்படுத்தியது.
- இந்த ஷுன்யா முன்மாதிரியானது, மணிக்கு 250 கி.மீ வேகத்தில் 20 முதல் 30 கி.மீ வரையிலான குறுகிய தூரப் பயணங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஆறு பயணிகளை ஏற்றிச் செல்லும் ஒரு திறன் கொண்ட இந்த வாகனம் ஆனது அதிக பட்சமாக 680 கிலோ எடையை சுமக்கும் திறன் கொண்டது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★